**Spl.SC.No. 19/2024** Dated:. 17.11.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்)

**அ.சா.3 கரண் த/பெ. ராமு**

**மனுவின் அடிப்படையில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

அ.சா.1 தாமரை செல்வி எனக்கு அக்கா உறவு முறை. அ.சா.2 முருகவேல் எனக்கு மாமா உறவு முறை. சம்பவத்திற்கு முன்பு ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். நானும் என் அம்மாவும் கமுதி குண்டாறு பாலத்திற்கு அருகில் தாமரைச்செல்வியையும் முருகவேலையும் பார்த்ததாக போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொன்னோம். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் நான் , எனது அம்மா, தாமரை செல்வி, முருகவேல் ஆகிய நால்வரும் கமுதி அரசு மருத்துவமனை அருகே உள்ள டீக்கடையில் டீ குடித்தோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கமுதிக்கும் கீழராமநதிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 7 கி.மீ. போலிஸ் விசாரணையில் நாங்கள் கீழராமநதிக்கு செல்லும்போது உடைமரம் வெள்ளைச்சாமி கோவிலுக்கு எதிரே மூன்று நபர்கள் உட்கார்ந்திருந்தார்கள் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. கோவிலுக்கு எந்த திசையில் உட்கார்ந்திருந்தார்கள் என்றால் திசை ஞாபகமில்லை. நாங்கள் சென்ற திசைக்கு இடதுபுறம்தான் அந்த மூன்று நபர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நாங்கள் கீழராமநதியிலிருந்து மீண்டும் திரும்பி இடைச்சியூரணி விலக்கு வரும்போது எவ்வளவு நேரம் கழித்து வந்தோம் என்றால் 45 நிமிடங்கள்

முதல் ஒரு மணி நேரம் இருக்கும். நாங்கள் திரும்பி வரும்போது இடைச்சியூரணி விலக்கு அருகே என் அக்கா அழுதுகொண்டிருந்தது என போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று நான் சொன்னமாதிரி நானோ என் அம்மாவோ ஆடு வாங்குவதற்காக செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சென்றபோது எதிரிகளை பார்த்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து போலிசார் வாக்குமூலம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார்தாரர் உறவுக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததை அப்படியே ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து மேலும் குறுக்கு விசாரணை

கீழராமநதிக்கு சென்றுவிட்டு நானும் என் அம்மாவும் திரும்பி வரும்போது என் அக்கா அவரை மூன்று நபர்கள் கற்பழித்து விட்டதாக சொன்னாரா என்றால் ஆமாம். நாங்கள் போய் தேடிப் பார்த்தோமா என்றால் தேடிப்பார்க்கவில்லை. நான் ரோட்டில் செல்லும்போது பார்க்கும் தொலைவில் மூன்று நபர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் எங்களை மறைத்து பணம், காசு கேட்டார்களா என்றால் இல்லை. என் அக்கா விவரம் சொன்னபிறகு அவரை நாங்கள் எங்கு அழைத்து சென்றோம் என்றால் அவர் எங்களுடன் வர மறுத்துவிட்டார். எனக்கு மனசு கஷ்டமாக இருக்கு என்று போய்விட்டார். அதன்பிறகு என் அக்காவுக்கு போன்

செய்து நீங்கள் எங்கு இருக்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள் என்று விசாரித்தோமா என்றால் இல்லை. அதன்பிறகு நான் மருத்துவமனை சென்று என் அக்காவை பார்த்தேனா என்றால் இல்லை. நான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் அக்கா புகார் கொடுக்கும்போது நானும் உடன் சென்றேனா என்றால் இல்லை. எத்தனை நாட்கள் கழித்து போலிசார் விசாரித்தார்கள் என்றால் நான் வீட்டில் இருக்கும்போது 22.02.2024ம் தேதி விசாரித்தார்கள். போலிசார் எதிரிகளை அடையாளம் காட்டும்படி சொன்னார்களா என்றால் இல்லை. என் அக்கா சொல்லித்தான் தெரியும். நான் என் அக்கா கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றும் அந்த சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிய்லல. எதிரிகளை நீதிமன்றத்தில்தான் நான் பார்க்கிறேன் என்றும் அதற்கு முன்பு நான் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. என் அக்காவின் சாதியை குறித்து யார் கேட்டது என்றால் 1ம் எதிரி அஜித் கேட்டதாக என் அக்கா சொன்னார். அந்த அஜித் யார் என கேட்டுத்தெரிந்துகொண்டேனா என்றால் போலிசார் பிடித்து விசாரணை செய்த பிறகுதான் நான் தெரிந்துகொண்டேன். நேரடியாக எனக்கு தெரியாது.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கமுதி காவல்நிலையத்தில் வைத்துதான் 3ம் எதிரி சூர்யாவின் பெயரை எனக்கு தெரியும் என்றால் நான் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. கமுதி கோட்டை மேட்டை சேர்ந்த பணபலமும் அரசியல் பலமும் மிக்க மதிவதனி என்பவரது மகள் புஷ்பராகவியை 3ம் எதிரி சூர்யா இருவரும் மனமொத்து விரும்பியதாலும் 3ம் எதிரி சூர்யாவை புஷ்பராகவி

தேடி வீட்டை விட்டு வெளியே சென்றதாலும் 3ம் எதிரி சூர்யாவை பழிவாங்கும் நோக்கத்தோடும் காவல்துறை அதிகாரிகளின் உதவியோடும் இந்த வழக்கில் 3ம் எதிரி சூர்யாவை பொய்யாக சேர்த்துள்ளனர் என்றும் அதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

**Spl.SC.No. 19/2024** Dated:. 17.11.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்)

**அ.சா.4 முனீஸ்வரி**

**மனுவின் அடிப்படையில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :–

அ.சா.1 தாமரை செல்வி எனக்கு அக்கா மகள். அ.சா.3 கரண் என் மகன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். நானும் என் மகனும் கமுதி குண்டாறு பாலத்திற்கு அருகில் தாமரைச்செல்வியையும் முருகவேலையும் பார்த்ததாக போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொன்னோம். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் நான் , எனது மகன், தாமரை செல்வி, முருகவேல் ஆகிய நால்வரும் கமுதி அரசு மருத்துவமனை அருகே உள்ள டீக்கடையில் டீ குடித்தோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. கமுதிக்கும் கீழராமநதிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ஞாபகமில்லை. நான் கீழராமநதிக்கு சென்றிருக்கிறேனா என்றால் சென்றிருக்கிறேன். போலிஸ் விசாரணையில் நாங்கள் கீழராமநதிக்கு செல்லும்போது உடைமரம் வெள்ளைச்சாமி கோவிலுக்கு எதிரே மூன்று நபர்கள் உட்கார்ந்திருந்தார்கள் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. கோவிலுக்கு எந்த பக்கம் உட்கார்ந்திருந்தார்கள் என்றால் இடதுபக்கம். ரோட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் உட்கார்ந்திருந்தார்கள் என்றால் 10 அடி தூரத்தில் உட்கார்ந்திருந்தார்கள். நாங்கள் கீழராமநதி சென்றுவிட்டு மீண்டும் இடைச்சியூரணி விலக்குக்கு எவ்வளவு நேரத்தில்

திரும்பி வந்தோம் என்றால் மதியம் 12.30 மணிக்கு வந்தோம். நாங்கள் திரும்பி வரும்போது இடைச்சியூரணி விலக்கு அருகே என் அக்கா மகள் அழுதுகொண்டிருந்தது என போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று நான் சொன்னமாதிரி நானோ என் மகனோ ஆடு வாங்குவதற்காக செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சென்றபோது எதிரிகளை பார்த்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. போலிசார் என்னை வீட்டில் வைத்து விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். இவ்வழக்கின் புகார்தாரர் உறவுக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததை அப்படியே ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து மேலும் குறுக்கு விசாரணை

கீழராமநதிக்கு சென்று ஆடு வாங்கினோமா என்றால் வாங்கவில்லை. வியாபாரியைத்தான் பார்த்துவிட்டு வந்தோம். ஆட்டுக்குட்டி வா'ங்க எவ்வளவு பணம் கொண்டுசென்றோம் என்றால் ரூபாய் 10000. எத்தனை ஆடு வாங்க சென்றோம் என்றால் ஒரு குட்டி. நாங்கள் கீழராமநதிக்கு சென்றபோது மணி எத்தனை இருக்கும் என்றால் 12.00 மணி. ஏன் ஆடு வாங்கவில்லை என்றால் காசுக்கு ஏற்ற வகையில் ஆடு கிடைக்கவில்லை என்பதால் வாங்கவில்லை. என் மகன் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் என்ன வண்டி என்றால் படிக்கவில்லை என்பதால் தெரியாது. ஆனால் பைக். நாங்கள் பார்த்த மூன்று நபர்களும் எங்கு உட்கார்ந்திருந்தார்கள்

என்றால் ரோட்டிற்கு பக்கத்தில். ரோட்டில் செல்லும்போது எப்படி பார்த்தோம் என்றால் எதார்த்தமாக பார்த்தோம். நாங்கள் முகத்தை சரியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். கீழராமநதி சென்றுவிட்டு மீண்டும் திரும்பி வரும்போது என் அக்கா மகளும் என் தம்பியும் எங்கு வைத்து பார்த்தோம் என்றால் போகும்போது பார்த்த அதே இடைச்சியூரணி விலக்கு அருகே பார்த்தோம். அப்போது மணி எத்தனை இருக்கும் என்றால் 12.30 மணி. எங்கள் வண்டியை என் அக்கா மகளும் தம்பியும் மறைத்தார்களா என்றால் இல்லை, நாங்கள் தான் விசாரித்தோம். விசாரித்தபோது என்ன சொன்னார்கள் என்றால் முகம் தெரியாதவர்கள் கற்பழித்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு என்ன சொன்னார்கள் என்றால் ஞாபகமில்லை. அதன்பிறகு நான் அவர்களை சிகிச்சைக்கு கூப்பிட்டோமா என்றால் இல்லை. அதன்பிறகு என் அக்கா மகளிடம் கூப்பிட்டு விசாரித்தோமா என்றால் இல்லை. என் அக்கா மகள் காவல்நிலையத்திற்கு சென்ற விவரம் எப்படி தெரியும் என்றால் போன் செய்து சொன்னார்கள். எனக்கு படிக்க தெரியாது என்பதால் தேதி தெரியாது. இரண்டு நாட்கள் கழித்து என் அக்கா மகள் சொன்னது. என்னிடம் தான் என் அக்கா மகள் சொன்னாள். நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் என் அக்கா மகளை நேரடியாக பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. போலிசார் என்னை எங்கு வைத்து எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் இரண்டு நாட்கள் கழித்து என் வீட்டிற்கு வந்து மாலை 5.00 மணியளவில் விசாரித்தார்கள். விசாரிக்கும்போது வேறு யார் இருந்தார்கள் என்றால் நான் மட்டும்தான் இருந்தேன். என்னை விசாரித்தது யார் என்றால் ஆய்வாளர். ஆய்வாளருக்கும் ஏட்டையாவுக்கும்

வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியாது. என்னை விசாரித்த ஆய்வாளர் பெயர் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தபோது நான் சொன்ன விவரத்தை எழுதி கையெழுத்து வாங்கிக்கொண்டாரா என்றால் கொண்டார். என் மகனும் சாட்சி கையெழுத்து போட்டாரா என்றால் போட்டார். என் மகனிடம் விசாரணை செய்த விவரத்தை எழுதி கையெழுத்து வாங்கிக்கொண்டார்களா என்றால் வாங்கிக்கொண்டார்கள். அதிலும் நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் போட்டேன். எதிரிகளை எங்கு வைத்து அடையாளம் காட்டினேன் என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். கருப்பு சட்டை , வெள்ளை சட்டை பொதுவாக எல்லாரும் போடுவதுதான் என்றால் தெரியாது. போலிசார் வீட்டில் வைத்து விசாரித்தபிறகு என்னை மீண்டும் விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் ஆடு வாங்கவே செல்லவில்லை என்றும் என்னிடம் 10000 ரூபாய் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அஜித் என்ற நபர் என் அக்கா மகளிடம் சாதி குறித்து கேட்டதாக என் அக்கா மகள் என்னிடம் சொன்னார். என் அக்கா மகள் ரூபாய் 3000 பணம் வைத்திருக்கவில்லை. முருகவேல்தான் வைத்திருந்தார். நான் என் உறவுக்காரர்களிடம் என் அக்கா மகள் சொன் விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. கற்பழித்த விவரத்தை வேறு யாரிடமும்சொன்னேனா என்றால் இல்லை. போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். எந்த போலிசார் என்னிடம் விசாரித்தார்கள் எனறால் ஆய்வாளர். பெண் ஆய்வாளரா இல்லை ஆண் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் ஆண் ஆய்வாளர்தான் விசாரித்தார். பெண் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. நான் சொன்ன மாதிரி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும் என் அக்கா மகளுக்காக பொய்

சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கமுதி காவல்நிலையத்தில் வைத்துதான் 3ம் எதிரி சூர்யாவின் பெயரை எனக்கு போலிசார் சொல்லி தெரியும் என்றால் சரிதான். கமுதி கோட்டை மேட்டை சேர்ந்த பணபலமும் அரசியல் பலமும் மிக்க மதிவதனி என்பவரது மகள் புஷ்பராகவியை 3ம் எதிரி சூர்யா இருவரும் மனமொத்து விரும்பியதாலும் 3ம் எதிரி சூர்யாவை புஷ்பராகவி தேடி வீட்டை விட்டு வெளியே சென்றதாலும் 3ம் எதிரி சூர்யாவை பழிவாங்கும் நோக்கத்தோடும் காவல்துறை அதிகாரிகளின் உதவியோடும் இந்த வழக்கில் 3ம் எதிரி சூர்யாவை பொய்யாக சேர்த்துள்ளனர் என்றும் அதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)